(3) தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரவர்களின் அறையிலே பேசும்பொழுது சொன்ன அதற்கு விரோதமாக இன்று, கோவை, சேலம், கிழக்கு முகவை மாவட்டங்களில் மின் துண்டிப்பு ஏற்பட்டு இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. பல விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதன் காரணமாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொண்டீர்களா இல்லையா என்பதை மட்டும் உறுப்பினர் கேட்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: எடுத்துக் கொள்வதாகத் தாங்கள் சொன்னீர்கள், இப்பொழுது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வதைத் தயவு செய்து கேட்க வேண்டும். நேற்று அனுமதி மறுக்கப்பட்டது. இன்றைக்குத் தாங்கள் எல்லாம் சொன்னதற்குப் பிறகு இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அது வருகிறது. எனவே அத்துடன் உட்காருங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, நான் நேற்று கூடச் சொன்னேன். 19 ஆம் தேதி இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தேன். அதில் ஒன்றை ஏற்றுக் கொள்ள மறுத்துப் பதில் வந்திருக்கிறது. இன்னொன்றுக்குப் பதில் வரவே இல்லை. அதையும் மறுத்துவிட்டால்கூட நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறைக்கு வாருங்கள், மறுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்கிறேன். (சிரிப்பு) அறைக்கு வாருங்கள், நான் யோசிக்கிறேன்.

திரு. மு. அண்ணாமலை : தலைவரவர்களே, அரிசனப் பெண் படுகொலை சம்பந்தமாகக் கொடுத்திருந்தேன். 25 நாட்களாக உண்ணாவிரதம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குத்தான் தாங்கள் கொண்டு வந்து கொடுத்தீர்கள். அது பரிசீலனையில் இருக்கிறது என்று தங்களிடத்தில் அப்பொழுதே சொன்னேன். இரண்டு மூன்று நாட்ளுக்குப் பின்னர் அதை எழுப்புவது நியாயமாக இருக்கும். கொண்டுவந்து கொடுத்த உடனேயே நானும் அனுமதிப்பதால் வரும் விளைவு இது. இப்படி எழுந்து பேசினால் அவைகளை நீக்கிவிடுவேன். இரண்டு நாட்

கள் ஆயிற்று என்றால் எழுப்பலாம். இப்பொழுது கொடுத்து விட்டு இப்பொழுதே எழுந்து என்னவாயிற்று என்று கேட்டால் என்ன செய்வது?

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தமாக 3–3–79 இல் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இன்னும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3–3–1979 ஆம் நாள் கொடுத்தீர்கள். 4 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை. நேற்றைக்கு ஒரு நாள் ஆகியிருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால் அமைச்சர் சார்பிலே பதில் வந்தாக வேண்டும். பதில் வந்த பிறகுதான் அதை நான் இங்கே கொண்டு வர முடியும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவரவர்களே, போன மாதம் 26 ஆம் தேதி 'கோ 441' அதாவது இராஜராஜன் என்ற அரிசியைச் சாப்பிட்டவர்களுக்கு இரத்த பேதி வந்து தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமையைப் பற்றிக் கொடுத்திருந்தேன். இரத்த பேதி என்றால் கவலை வேண்டாமா? அது என்னவாயிற்று என்று தலைவரவர்கள் சொல்ல வேண்டும். இல்லையென்றால் எப்பொழுது எடுக்கப்போகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பரிசீலிக்கப்படும்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) நக்ஸலைட் என்பதாக மார்க்சிஸ்ட் பலர் கைது செய்யப் பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். "நெல்லை மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ராஜாங்கம், செங்கற்பட்டு ராதாகிருஷ்ணன், மதுரையில் மூவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சென்னை கோபு மற்றும் பலரை போலீசார் நக்ஸலைட் எனக்கூறி கைது செய்திருப்பதால் மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு, திரு. ஆர். உமாநாத், திரு. கே. ரமணி, திரு. பி. சொர்ணம், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. சி. கோவிந்தராசன், திரு. என். பழனிவேல், திரு. வி. கே. கோதண்டராமன், திரு. எஸ். அழகர்சாமி, திரு. உத்திராபதி, திரு. அம்பிகாபதி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. உமாநாத் அவர்கள்.